இந்து சமய அறநிலையத்துறை

அனுப்புநர்

ஜெ.குமரகுருபரன்.இ.ஆ.ப.,
ஆணையர்,
சென்னை–34.

பெறுநர்

1. அனைத்து இணை ஆணையர்கள்
2. அனைத்து இணை ஆணையர்/ செயல் அலுவலர்
3. அனைத்து துணை ஆணையர்/ செயல் அலுவலர்கள்
4. அனைத்து உதவி ஆணையர்கள்
5. அனைத்து உதவி ஆணையர்/ செயல் அலுவலர்கள்

ந.க.எண். 31154 / 2010 எம்3 நாள் 20.11.2021

அய்யா,

பொருள்: அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் குத்தகை / உரிமம், பொது ஏலம் / ஒப்பந்தபுள்ளி மூலம் வழங்கிட அறிவுரை வழங்குதல் – தொடர்பாக

பார்வை: இவ்வலுவலக சுற்றறிக்கை ந.க.எண். 31154/2010/ எம்.3/ நாள் 19.08.2021

--------

இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையாச் சொத்துக்கள் குறித்து குத்தகைக்கு மற்றும் உரிமங்களை பொது ஏலம் மூலம் வழங்குதல் தொடர்பாக 1959 இந்து சமய அறநிலையகொடைகள் சட்டத்தின் பிரிவு 116 (2)(xiii)ன் கீழ் சமய நிறுவனங்களின் அசையாச் சொத்துக்களை குத்தகை விடுதல் தொடர்பான விதிகள் வகுக்கப்பட்டுள்ளன,.

பார்வையில் கண்ட இவ்வலுவலக சுற்றறிக்கையில், மேற்படி விதிமுறைகளின் படி ஏலம் யாரிடம் அனுமதி பெற வேண்டும், யாரால் விடப்பட வேண்டும், கால அளவு, ஏல அறிவிப்பில் விதிக்கப்பட வேண்டிய நிபந்தனைகள், ஏல அறிவிப்பு செய்யும் விதம், ஏலம் யாரால் நடத்தப்பட வேண்டும், முன் வைப்புத் தொகை, குத்தகை அல்லது உரிமம் வழங்கும் முறை, பிணை வைப்பு, ஆணையரின் இரத்து அதிகாரத்தை பிரயோகிப்பது போன்ற விபரங்கள் குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

அறநிறுவனங்களுக்குச் சொந்தமான நன்செய், புன்செய் நிலங்கள் ஏற்கனவே குத்தகைதாரர்களிடம் இருந்து ஆக்கிரமிப்பு என்ற முறையிலோ ஆர்.டி.ஆர். பதிவு பெறாமல் தொடர்ந்து வைத்திருந்தாலோ, குத்தகை தொகை

Verified RealEstate™

சரிவர செலுத்தாமல் நிலுவை வைத்திருந்தாலோ, மேற்படி நிலங்களை திருக்கோயில் சுவாதீனத்திற்கு கொண்டு வந்து பொது ஏலத்தில் விட திருக்கோயில் நிர்வாகிகளால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பொது ஏலத்தில் விட நடவடிக்கை எடுக்கும்போது, ஆணையர் அனுமதிக்கு திருக்கோயில் செயல்/ அலுவலர்/நிர்வாகியால் விண்ணப்பிக்கப்பட்டு இணை ஆணையர்/ உதவி ஆணையர்களால் பரிந்துரைக்கப்படுகிறது,

பார்வையில் கண்ட சுற்றறிக்கையில் இனிவரும் காலங்களில் அறநிறுவனங்களுக்குச் சொந்தமான அசையா சொத்துக்கள் முதல்முறை பொது ஏலம்/ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கப்படும் இனங்களில் கடைபிடிக்க வேண்டிய நடைமுறைகளை பின்பற்ற அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதில் பத்தி (1) ல் "அறநிறுவனங்களுக்கு சொந்தமான மனை /கட்டடிங்களில் வாடகை குத்தகை உரிமத்தினை முதன்முறை பொது ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி மூலம் வழங்கப்படும் இனங்களில், இதுவரை ஆணையருக்கு விண்ணப்பித்து அனுமதி பெறப்பட்டு வந்தநிலையில் இவ்வலுவலக 19.08.2021 நாளிட்ட சுற்றறிக்கை தேதியிலிருந்து அந்தந்த மண்டலத்திற்குரிய சமய அறநிறுவனங்களின் அசையாச் சொத்துக்கள் குறித்த அனைத்து வகை முதன்முறை ஏலத்தை அங்கீகரித்து மண்டல இணை ஆணையர்களே ஏல அனுமதி வழங்கிக் கொள்ள ஆணையரால் அதிகார பகிர்வு அளிக்கப்பட்டுள்ளது." அவ்வழியே பட்டியல் சாராத திருக்கோயில்களின் (பிரிவு 49) அசையாச் சொத்துகளை முதன்முறை ஏல அனுமதிக்கு உத்திரவு வழங்கும் அதிகாரம் உதவி ஆணையர்களுக்கு வழங்கப்படுகிறது. முதன் முறையாக ஏலம் நடத்தியமைக்குரிய விவர அறிக்கையை உதவி ஆணையர்கள் நேரடியாக ஆணையருக்கு அனுப்பி விட்டு அதன் நகலை இணை ஆணையருக்கு தகவலுக்காக அனுப்பி வைக்குமாறு அறிவுறுத்தி இந்த சுற்றறிக்கை அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது, இதனை பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகையை அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. இச்சுற்றறிக்கை விவரத்தை தங்களது ஆளுகையின் கீழ் உள்ள அனைத்து சார்நிலை அலுவலர்களுக்கும் தெரிவிக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

ஒம்,/-ஜெ.குமரகுருபரன்
ஆணையர்

/உ.ந.உ.ப./

தனி அலுவலர்-1(ஆ.நி.)/
மாவட்ட வருவாய் அலுவலர்

2/2

22.11.2021